வியாழக்கிழமை 1979 ஏப்ரல் மாதம் 19-ம் தேதி.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கீழ்சிஷமங்கலம் பகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் துண்டிப்பு.

குறுகிய கால வினா எண். 48. திரு. சோ. அழகர்சாமி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், கீழ்க்கொடுங்காலூர் சப்-ஆபீஸ் மூலம் கீழ்சிஷமங்கலம் பம்பு செட் விவசாயிகளுக்கு 1979 சனவரி முடிய பாக்கியின்றி கட்டியிருந்தும் பிப்ரவரியில் கட்ட வேண்டிய பில்லை 5—3—1979-ல் கொடுத்து அந்த பாக்கிக்காக மட்டும் 16—3—1979-ல் மின் துண்டிப்பு செய்யப்பட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில் அரசு அறிவிப்புக்கு விரோதமாக நடந்துள்ள அதிகாரிகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பிப்ரவரி மாதத்திற்கான கட்டணத்தை செலுத்தாமைக்கு இப்பகுதியில் மின் துண்டிப்பு செய்யப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, அது போல் மின் துண்டிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அது போல் அரசு உத்தரவு போட்டும் கூட மீண்டும் மீண்டும் துண்டிக்கிறார்களே அதைத்தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே மீண்டும் எங்கே நடந்தாலும் அதை அரசுக்கு தெரிவிக்கலாம். நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.